நகராட்சி அலுவலகம்
உசிலம்பட்டி
நாள்:24.12.2025

சாதாரணக் கூட்டம்

14.11.2025 அன்று நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட

மன்றப்பொருள்

மன்றப்பொருள்-1

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திடமிருந்து பெறப்பட்ட இந்நகராட்சிக்குச் சொந்தமான 7.85 ஏக்கர் நிலப்பரப்பில் 1 ஏக்கர் நிலப்பரப்பு பேருந்து நிலைய விரிவாக்கப்பணிக்கு போக மீதமுள்ள 6.85 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள குத்தகை இனங்களான தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தை ஆகியவற்றிற்கு ஏல நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஊராட்சி ஒன்றியத்தால் நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்ட தொகையை இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு வசூல் செய்யவும், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தால் ஒப்படைக்கப்பட்ட இருசக்கர வாகனம், மற்றும் கழிப்பறை மற்றும் இதர இனங்களுக்கு 2026-27ஆம் நிதியாண்டிற்கு குத்தகைத்தொகை நிர்ணயம் செய்ய ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை கீழ்க்காணும் பட்டியல் சொல்லப்பட்டுள்ள இனங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தால் நிர்ணயம் செய்த வாடகைத்தொகையை கணினியில் பதிவேற்றம் செய்து வசூல் செய்வதற்கும், மேற்படி குத்தகை இனங்கள் மேல்நடவடிக்கை தொடர்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று, அரசாணைகளின்படியும், சுற்றறிக்கைகளின்படியும் வாடகை மறு நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ.எண்.	**கடைகளின் விபரம்**
1	தேனி சாலை கடைகள்
2	பஜார் ஸ்டால்
3	முருகன்கோவில் தெரு, வணிக வளாக கடைகள்
4	பேரையூர் சாலை வணிக வளாகம்
5	பஜார் பள்ளி சத்திரத்தெரு குடோன்
6	தேவர் திருமண மண்டபம்

7	54 தரைக் கடைகள்
8	பேரையூர் சாலை சந்தைக்கருகில் உள்ள கடைகள்
9	நபார்டு கடைகள்
10	தரை வாடகை கடைகள்
11	ஜே.வி.வி.டி கடைகள்- பேரையூர் சாலை
12	நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் உள்ள கட்டிடம்
13	சைக்கிள் ஸ்டாண்ட், கழிப்பரை
14	நகராட்சி சத்திரம் அருகில் உள்ள குடியிருப்பு

அலுவலகக்குறிப்பு:-

1). மன்றத்தின் முடிவிற்கு.

2). நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் பின்னேற்பு பெறப்பட்டு அரசாணைகள், சுற்றறிக்கைகளின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3). அலுவலகக்குறிப்பு 1 அல்லது 2-ஐ அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1507/ 1995/இ

தீர்மான எண்: 943

தீர்மானம் : ஏற்கனவே செலுத்திவந்த வாடகைகாட்டிலும் கூடுதலாக 25% தற்காலிகமாக நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றத்தில் முடிவு செய்து தீர்மாணிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களிடம் பின்னேற்பு பெறப்பட்டு இருதி உத்தரவு வழங்க தீர்மானிக்கப்படுகிறது.

வார்டு எண் 5 மற்றும் 12 வார்டு உறுப்பினர்கள் வருகை பதிவேட்டில் கையொப்பம் இடவில்லை . ஆனால் நகர்மன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு மன்ற பொருள் எண் 1,2,3, மற்றும் 4 ஆகியவற்றிக்கு ஆட்சேவனை தெரிவித்தனர் மற்ற உறுப்பினர்கள் அனுமதி அளித்ததின் பேரில் தீர்மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற தலைவர் (பொ) அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

மன்றப்பொருள்-2

அரசாணை (நிலை) எண். 28, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 22.02.2023-இன்படி பேருந்து நிலைய விரிவாக்கப்பணி நடைபெற்று வருகிறது. உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்த 7.85 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு ஏக்கர் மட்டும் பேருந்து நிலைய விரிவாக்கப்பணிக்கு எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஒரு ஏக்கரில் ஊராட்சி ஒன்றியத்தில் உத்தரவு பெற்று பலர் கடைகள் நடத்தி வருகின்றனர். ஊராட்சி ஒன்றியத்தால் இக்கடைகள் இயங்கிய நிலையில் மேற்படி இடம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், சைக்கிள் ஸ்டாண்ட் மற்றும் கழிப்பறைகள் இயங்கி வந்தன.

பேருந்து நிலைய பணிகள் விரைவாக முடிப்பதற்காக மேற்கண்ட கடைகள் அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் ஊராட்சி ஒன்றியத்தின் உரிமை பெற்று கடைகள் நடத்தி வரும் மேற்கண்ட கடைதாரர்களுக்கும் மாற்று இடத்தில் இடம் ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1). மன்றம் முடிவு செய்யலாம்.

2). மன்றம் அனுமதித்தால் தற்காலிக உத்தரவானது வழங்கப்படும். நகராட்சி குத்தகை விதிகளின்படியும் அரசு அறிவித்துள்ள அரசாணை மற்றும் சுற்றறிக்கையின்படியும் நகர்மன்றத்தின் ஒப்புதலின்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு உரிமம் மற்றும் வாடகை உறுதி செய்து இறுதி உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ந.க.எண். 2004/2025/அ1)

தீர்மான எண்: 944

தீர்மானம் : பேருந்து நிலையம் விரிவாக்க பணிக்காக மேற்கே 1 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள குத்தகை இனங்கலுக்கு மாற்று இடங்கலுக்கு தற்காளிகமாக வழங்க முடிவு செய்து தீர்மாணிக்கப்பட்டது இருதி உத்தரவு வழங்க தீர்மாணிக்கப்படுகிறது.

நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற தலைவர் (பொ) அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

மன்றப்பொருள் :3

ஊராட்சி ஒன்றியத்தால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது இந்நகராட்சிக்குச் சொந்தமான சந்தைப்பகுதியில் அமைந்துள்ள தகர மேற்கூரையால் அமைக்கப்பட்ட நபார்டு கடைகள் நகராட்சி பேருந்து நிலைய விரிவாக்கப்பணிக்கு தேவைப்படும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஊராட்சி ஒன்றியத்தில் உரிமம் பெற்று கடை நடத்தி வரும் கடைதாரர்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டி உள்ளது.

நபார்டு கடைகளில் அனுமதி இல்லாமல் பலர் பூக்கடை நடத்தி தொழில் செய்து வருகின்றனர். மேற்கண்ட காரணத்திறக்க அவர்களை காலி செய்ய வேண்டி உள்ளது. இருப்பினும் நகராட்சி வருவாயை பெருக்கும் வேண்டியுள்ளதால் மேற்கண்ட நபர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு பூக்கடைகாரர்களுக்கு மாற்று இடமாக உழவர் சந்தை எதிர்புறம் உள்ள பயன்பாட்டில் இல்லாத காலியிடத்தில் இடம் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1).மன்றம் முடிவு செய்யலாம்.

2). மன்றம் அனுமதித்தால் தற்காலிக உத்தரவானது வழங்கப்படும். நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு உரிமம் மற்றும் வாடகை உறுதி செய்து இறுதி உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ந.க.எண். 2004/2025/அ1)

தீர்மான எண்: 945

தீர்மானம் : ஏற்கனவே செலுத்தி வந்த வாடகையை காட்டிலும் கூடுதலாக 25% நிர்னயம் செய்து வசுல் செய்து மன்றம் முடிவு செய்து தீர்மாணிக்கப்பட்டது.

நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற தலைவர் (பொ) அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

மன்றப்பொருள் :4

நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதை தடுக்கும் வண்ணம் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட தற்போது நகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள கடைகள் மற்றும் பிற இனங்களுக்கு (Regularate) வரன்முறை செய்யும் வரை ஊராட்சி ஒன்றியத்தால் வசூல் செய்யப்பட்ட வாடகையை காட்டிலும் 25% கூடுதலாக வாடகை மற்றும் நிலுவைத்தொகைகளை நகராட்சி வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1). மன்றம் முடிவு செய்யலாம்.

2). மன்றம் அனுமதித்தால் தற்காலிக உத்தரவானது வழங்கப்படும். நகர்மன்றத்தின் ஒப்புதலின்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு உரிமம் மற்றும் வாடகை உறுதி செய்து இறுதி உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ந.க.எண். 2004/2025/அ1)

தீர்மான எண்: 946

தீர்மானம் : பூ மாலை கடை வியாபாரம் செய்யப்படுவர்களுக்கு உழவர் சந்தை எதிர் புரம் உள்ள பயன்பாட்டில் இல்லாமல் உள்ள காலி இடத்தில் ஒதுக்கீடு செய்து ஒரு கடைக்கு 100 ரூபாய் என்ற வீதம் நிர்வாகத்தில் வசூல் செய்ய மன்றத்தில் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:5

அரசாணை (நிலை) எண். 28, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 22.02.2023-இன்படி அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள் வசதிகள் நிதி 2022-2023-இன்கீழ் இந்நகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின் 27.11.2025-ஆம் தேதிய கூட்ட நடவடிக்கையின் அடிப்படையில் பேருந்து நிலையத்தில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள தரைத்தளத்தில் 42 எண்ணம் கடைகள், முதல் தளத்தில் 8 எண்ணம் கடைகள் மொத்தம் 50 கடைகளுக்கு

இந்நகராட்சி பொறியாளரால் வழங்கப்பட்டுள்ள அங்காடி மதிப்பீட்டின் சராசரி அடிப்படையிலும், பொதுப்பணித்துறை விலைவிகிதம் அடிப்படையிலும் வாடகை மதிப்பு நிர்ணயம் செய்து முன் வைப்புத்தொகை ரூ.3,00,000/-ம், கூடுதல் பொறுப்புத்தொகை ரூ. 3,00,000/-ம், தரைத்தளத்திற்கு குறைந்தபட்ச வாடகைத்தொகை ரூ.13,000/- மற்றும் முதல் தளத்திற்கு குறைந்தபட்ச வாடகைத்தொகை ரூ. 10,000/-ஐ நிர்ணயம் செய்து முன்தேதியிட்ட ஏல நடவடிக்கை / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி விபரத்தினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கோரி குத்தகைக்கு விடுவதற்கு மதுரை மாவட்டத்தில் வெளியிடப்படும் அரசிதழ், தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் இணையதளத்தில் வெளியிடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 441/2025/அ1)

தீர்மான எண்: 947
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-6

இவ்வலுவலகத்தில் உள்ள கணினிகாக S.F.W. Work Cabling (LAN) சேதமடைந்துள்ளது. மேற்கண்ட கேபிளிங்கை புதிதாக அமைக்கவும், கணினிக்குரிய மின் இணைப்புகளை புதிப்பித்து சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 2350/எச்1/2022

தீர்மான எண்: 948
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-7

இவ்வலுவலகத்திற்கு தேவையான புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய கணினிகள் 5 எண்ணம் மற்றும் புதிய தொழில் நுட்பத்துடன் கூடிய லேப்டாப் 2 எண்ணம் ஆகியவை கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 2350/எச்1/2025

தீர்மான எண்: 949
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-8

இவ்வலுவலகத்திற்கு புதிதாக வாங்கப்பட்டுள்ள கழிவு நீர் வாகந்த்திற்கு ஓட்டுநர், அலுவலக இரவு காவலர் மற்றும் உரக்கிடங்கு காவலர் ஆகிய பணியிடங்கள் இல்லை, எனவே , மேற்கண்ட பணி யாளர்களை வெளிகொணர்வு முகமை நிரப்ப ஆகும் உத்தேச செலவினம், 5 மாதங்களுக்கு ரூ.4.00 இலட்சத்திற்கும், மேற்கண்ட பணியாளர்களை விநியோகம் செய்ய ஒப்பந்தப் புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1945/எச்1/2025

தீர்மான எண்: 950
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-9

இவ்வலுவக பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான் _ பிளீச்சிங்பவுடர் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் விநியோகம் செய்ய விளைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விளைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன

பிளிச்சிங் பவுடர்

வ.எண்	பெயர்	1 கிலோவிற்கு
1	ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போட்ஸ்	ரூ.47.20

2	**ஸ்ரீ** பாலாஜி மார்கெட்டிங் ட்ரேடர்ஸ்	**ரூ** 53.10

நீர்த்த சுண்ணம்புத்தூள்

வ.எண்	**பெயர்**	**1 கிலோவிற்கு**
1	**ஸ்ரீ** தாய் மூகாம்பிகை எக்ஸ்போட்ஸ்	**ரூ.**09.45
2	**ஸ்ரீ** பாலாஜி மார்கெட்டிங் ட்ரேடர்ஸ்	**ரூ** 15.75

மேற்கண்ட இரண்டு இணங்களுக்கும் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ** தாய் மூகாம்பிகை எக்ஸ்போட்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டும்

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 567/எச்1/2025

தீர்மான எண்: 951
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-10

இவ்வலுவலக பொது சுகாதாரப் பிரிவுற்கு தேவையான நிலவேம்வு 250.கி.கி விநியோகம் செய்ய விலைபுள்ளி கோரப்பட்டத்தில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

வ.எண்	**பெயர்**	**1 கிலோவிற்கு**
1	**ஸ்ரீ** தாய் மூகாம்பிகை எக்ஸ்போட்ஸ்	**ரூ** 1785
2	**ஸ்ரீ** பாலாஜி மார்கெட்டிங் ட்ரேடர்ஸ்	**ரூ** 1890

இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ** தாய் மூகாம்பிகை எக்ஸ்போட்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்ட்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 567/எச்1/2020

தீர்மான எண்: 952
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-11

இந்நகராட்சி எல்லைக்குள் சுற்றித்திரியும் தெரு நாய்களை உச்சநிதி மன்ற உத்தரவு மற்றும் தமிழ் நாடு அரசின் வழிகாட்டுதலின்படி பிடித்து நிலக்கோட்டை கால் நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அறுவை சிகிச்சை செய்து திரும்ப கொண்டுவர உரிய வாகணம் இவ்வளுவலகத்தில் இல்லை, எனவே இவ்வலுவலகத்திர்கு சொந்தமான LCV வாகனத்தை நாய்களை பிடித்து கொண்டு செல்ல ஏதுவாக உரிய உபகரணங்களுடன் வடிவமைப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 3156//எச்1/2012

தீர்மான எண்: 953
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-12

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருநாய்கள் 251ஆக உள்ளது மேற்கண்ட தெரு நாய்களை உச்ச நீதி மன்ற உத்தரவு மற்றும் தமிழ்நாடு அரசுகளின் வழிகாட்டுதளின் படி அவைகளை பிடித்து பிடித்து நிலக்கோட்டை கால் நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று ரேபிஸ் தருப்பீசி போட்டு கருத்தடை அருவை சிகிசை செய்ய அரசு நிர்ணயித்த கட்டனத்தின் அடிப்படையில் ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 3156//எச்1/2012

தீர்மான எண்: 954
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-13

இந்நகராட்சி எல்லைக்குள் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடிக்க தணார்வ நிருவகனங்களின் உதவியுடன் வெளிகொண்ர்வு முகமை பணியாளர்கள் மூலம் பிடிக்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 3156//எச்1/2012

தீர்மான எண்: 955
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-14

இவ்வலுவலக கணினி உபகரணங்காளை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள விளைபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றது.

வ.எண்	பெயர்	1கிலோவிற்கு
1	தினேஸ் சிஸ்டம்ஸ் மதுரை	ரூ.276400/-
2	ஜி.சி.எஸ் இன்போடெக் , மதுரை	ரூ.280400/-
3	இமேஜ் சிஸ்டம்ஸ் மதுரை	ரூ.283900/-

இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள தினேஸ் சிஸ்டம்ஸ் மதுரை நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்ட்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 567/எச்1/2020

தீர்மான எண்: 956
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-15

நகர்மன்ற தலைவர் மற்றும் வார்டு எண்.11-க்கான நகர்மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து திருமதி.க.சகுந்தலா அவர்களை நீக்குதல் செய்து அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது .அதனை தொடர்ந்து திருமதி .க.சகுந்தலா என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை

யில் வழக்கானது தொடரப்பட்டது வழக்கு எண் . WP(MD)No.35403 of 2025 ஆகும் வழக்கிணை எதிர்த்து அரசு சார்பில் வாதாடிய வழக்கிற்கு வழக்குரை கட்டணம் திரு.பாஸ்கரன் வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ. 50000/-மற்றும் திரு.ஆஸ்டின் வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ.25000/- வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1204/2022//எப்1)

தீர்மான எண்: 957
தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

நகர்மன்ற சாதாரண கூட்டம் நாள் 24.12.2025 புதன் கிழமை

மேஜை கூட்டப்பெருள்

மன்றப்பொருள்-1

தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2025-2026-இன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு DMA 288/2025/SBM 2 நாள் 24.11.2025-இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பணி விபரம்	மதிப்பீடு
1	புதிய பேருந்து நிலையத்தில் பொது கழிப்பிடம் 2 எண்ணம் அமைக்கும் பணி (மேற்கு மற்றும் கிழக்கு பக்கம்)	ரூ.63.84/- இலட்சம்

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண் 2357/2025/இ1)

தீர்மான எண்: 958

தீர்மானம் : அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது

மன்றப்பொருள்-2

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை அவர்களின் செயல்மறை உத்தரவு ந.க எண் 086/2025/டி2 நாள் 18.11.2025 மற்றும் 19.11.2025-இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வ.எண்	பணி விபரம்	மதிப்பீடு
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் சேமிப்பு நிதி 2021-22 முதல் 2023-24 வரை		
1	ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதி வார்டு எண் 15-இல் பைப்லைன் மற்றும் சின்டெக்ஸ் அமைத்தல் பணி	ரூ.1,07000/-
2	ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதி வார்டு எண் 15-இல் போர்வெல் மற்றும் பைப்லைன் அமைத்தல் பணி	ரூ.209000/-
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2025-2026		
3	வார்டு எண் 3 அன்னம்பாரிபட்டி அய்யனார் கோவில் அருகில் தடுப்பு சுவர் அமைத்தல் பணி	ரூ.600000/-

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க எண் 1730/2025/இ1)

தீர்மான எண்: 959

தீர்மானம் : : அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது

மன்றப்பொருள்-3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 இ.பி டிரான்ஸ்பார்மர் தெருவில் மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணிக்கு 19.11.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எ.	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்புநோக்கு பட்டியலின்படி
1	வார்டு எண் 19 இ.பி டிரான்ஸ்பார்மர் தெருவில் மழைநீர் வடிகால்	ரூ.1.00/-	M/s சுஜி இன்பரா,	0.02% குறைவு

	சீரமைக்கும் பணி		M/S ரவிக்குமார் காண்ட்ரக்டர்	5.06% அதிகம்

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1041/2025/இ1)

தீர்மான எண்: 960

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகல் சாலைகளில் உள்ள குண்டு குழிகளை சீரமைக்கும் பணிக்கு 25.11.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எ.	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்புநோக்கு பட்டியலின்படி
1	இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகல் சாலைகளில் உள்ள குண்டு குழிகளை சீரமைக்கும் பணி	ரூ.5.00/-	M/s சுஜி இன்பரா,	5.88% அதிகம்
			M/S கேபிகே கன்ஸ்ட்ரக்ச்ன்	0.01% குறைவு

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1041/2025/இ1)

தீர்மான எண்: 961

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள்-5

இந்நகராட்சி சொந்தமான அம்மா உணவகம் பாத்திரம் கொள்முதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள 14.11.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எ.	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	ஒப்பந்ததாரர் பெயர்	ஒப்புநோக்கு பட்டியலின்படி
1	அம்மா உணவகத்திற்கு தேவையான தளவாட சாமான்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு பணி	ரூ.10.00/-	M/s சுஜி இன்பரா,	9.33% குறைவு
			திருமதி.பேச்சி	3.60% குறைவி
			M/s கேபிகே கன்ஸ்ட்ரக்சன்	3.00% அதிகம்

குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 1041/2025/இ1)

தீர்மான எண்: 962

தீர்மானம் : மதிப்பீட்டு ரேட்டினை விட மிக குறைவாக (9.33) ஒப்பந்தாரர்கள் கோரியதால் மேற்கண்ட பணி நகர் மன்ற உறுப்பினர்களால் தீர்மானம் இரத்துசெய்து மறு ஒப்பந்த புள்ளி கோர மன்றம் அனுமதிக்கின்றது.

மன்றப்பொருள் - 6

சார் ஆட்சியர், உசிலம்பட்டி அவர்களின் கடிதம் ந.க எண் 2100/2025/ஆ2 நாள் 22.12.2025 -இன் படி உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொது இடத்தில் விபத்துக்குள்ளான இரு சக்கர வாகனத்தை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காட்சிப்படுத்த தேர்வு செய்யப்பட்ட இடத்தில் பொதுமக்களுக்கு எளிதில் தெரியும் வண்ணம் மேடை அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 2562/2025/இ1)

தீர்மான எண்: 963

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மன்றப்பொருள் - 7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 செல்வி மகால் பின்புறம் உள்ள தெருவில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் மேற்படி சிறுபாலத்தினை இடித்து அப்புறபடுத்தி புதிதாக சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தாயர் செய்யப்பட்டமைக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2563/2025/இ1

தீர்மான எண்: 964

தீர்மானம் : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது